(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **235**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 சனவரி 23, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய**, சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்** : சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

"அரசியலமைப்பின் 66(ஆ) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். எச். எம். சல்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கும் கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கையளித்துள்ளார் என்பதனைப் பாராளுமன்றத்திற்கு அறிவித்துக் கொள்கின்றேன். அக் கடிதம் தற்பொழுது பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்களால் சபைக்கு வாசிக்கப்படும்."

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

2018.01.18

මහ ලේකම්
ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව
ශ්‍රී ජයවර්ධනපුර
කෝට්ටේ

මහ ලේකම්තුමනි,

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ මන්ත්‍රීවරයෙකු වශයෙන් කටයුතු කරන මම; එම මන්ත්‍රීධුරයෙන් ඉල්ලා අස්වන බව මෙයින් දන්වමි.

ස්තූතියි.

එම්.එච්.එම්. සල්මාන්
පාර්ලිමේන්තු මන්ත්‍රී

M.H.M. Salman
Member of Parliament

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்—

(i) 2011 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XVIII ஆம் பகுதியையும்;

(ii) 2013 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXIV ஆம் பகுதியையும் மூன்றாவது தொகுதியின் VIII ஆம் பகுதியையும்;

(iii) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXII ஆம் பகுதியையும் மூன்றாவது தொகுதியின் VIII ஆம் பகுதியையும் ஒன்பதாவது தொகுதியின் VI ஆம் பகுதியையும்; மற்றும்

(iv) 2016 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் V, VI, VII, VIII, IX, மற்றும் X ஆம் பகுதிகளையும், மூன்றாவது தொகுதியின் III ஆம் மற்றும் IV ஆம் பகுதிகளையும் ஒன்பதாவது தொகுதியின் II ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமென்றும் அச்சிடப்பட வேண்டுமென்றும் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டுக்கான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய வருடாந்த அறிக்கை; மற்றும்

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு, 2017 திசெம்பர் 04 ஆம் திகதி 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்க நெறிகள்;

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ் அறிக்கை மற்றும் ஊடக வழிகாட்டு நெறிகள் சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2017 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டு வரையிலான நிதிச் செயலாற்றுகை அறிக்கை;

(ii) 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6 (2) ஆம் பிரிவின் கீழ் தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவெம்பர் 07 ஆம் திகதிய 2044/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(iii) 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம்பிரிவின் கீழ் 2017.11.01 முதல் 2017.12.29 ஆம் திகதி வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர

தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை, ஒழுங்குவிதிகள் மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 2015 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2016 மார்ச்சு 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் திறைசேரி பிணை முறிகளை வழங்குதல் தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் சனாதிபதி புலனாய்வு ஆணைக்குழவின் அறிக்கை சபையின் விசேட அங்கீகாரத்துடன் ஆங்கில மொழியில்; மற்றும்

(ii) பாரிய மோசடி, ஊழல், அதிகார துஷ்பிரயோகம், அரச சொத்துக்கள் மற்றும் சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்தல் தொடர்பாக விசாரணை செய்வதற்கான சனாதிபதி புலனாய்வு ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை சபையின் விசேட அங்கீகாரத்துடன் சிங்கள மொழியில்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, சவுத் ஏஷியன் இன்ஸிரிரியுற் ஒப் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் லிமிடெட் நிறுவனத்தை உயிர் முறைமையியல் கௌரவ விஞ்ஞான இளமாணிப் பட்டம் மற்றும் கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியரிங் கொலேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தை சில்லறை சந்தைப்படுத்தல் மற்றும் பண்டக்குறியிடுதலில் கௌரவ முகாமைத்துவ இளமாணி மற்றும் விநியோக சங்கிலி முகாமைத்துவத்தில் கௌரவ முகாமைத்துவ இளமாணி பட்டங்களை வழங்கும் நிறுவனங்களாக அங்கீகரித்து உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 28 ஆம் திகதிய 2047/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள்; மற்றும்

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் சவுத் ஏஷியன் இன்ஸிரிரியுற் ஒப் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிடெட் (SAITM) நிறுவனம் தொடர்பில் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2013 செத்தெம்பர் 26 ஆம் திகதிய 1829/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2011 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய 1721/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையைத் திருத்தி 2017 திசெம்பர் 12 ஆம் திகதிய 2049/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 321 ஆம் பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறியவர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 04 ஆம் திகதிய 2017/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை மற்றும் ஒழுங்குவிதிகள் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 திசெம்பர் 14 ஆம் திகதிய 2049/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதிகள் சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பெறுபேற்று அறிக்கையைச் சமர்ப்பித்து

மேற்படி அறிக்கை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்று அறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகளை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 27 ஆம் திகதிய 2047/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து, அக்கட்டளை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார். பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகள் சமர்ப்பணம்:** வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி சார்பாக அக் குழுவின் உறுப்பினர் கௌரவ நிஹால் கலப்பத்தி அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, **கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம்** தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று,

**4. மனுக்கள்:**

(1) (i) மீரிகம, அடவி வன அலுவலகத்தில் பணிபுரியும் திரு. எம்.ஏ. திலகரத்னவினது 2017.10.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வே உட, யட்டிவில்ல, போகஹவில் பணிபுரியும் திருமதி எஸ்.ஏ. சோமலதாவினது 2017.11.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஜே.சீ. அலவதுவல சமர்ப்பித்தார்.

(2) மீரிகம, விஜய ரஜதஹன, இல. 26 இல் வதியும் திரு. எஸ்.என். மஹவெலகேயினது 2017.10.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

(3) (i) குருவிட, மில்லவிட்டிய, கொழும்பு வீதியில் வதியும் திரு. ஏ.கே.டப்ளியூ. விஜேசேகரவினது 2017.11.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) அநுராதபுரம், ரத்மல்கஹவெவ, நெலுகொல்லாகடவில் வதியும் திருமதி ஏ.எம். பஸ்மியாவினது 2017.10.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) மெதவெச்சி, நீதிமன்ற வீதி, இல. 3/10 இல் வதியும் திரு டி.கே. ஜயதிலகவினது 2017.08.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) கோட்டே, மாதிவெல, சிகேரா வீதி, இல. 245/3/ஏ யில் வதியும் திரு. எச். சேனாரத்னவினது 2017.08.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) கெகுணகொல்ல, நிதுல்லகஹபிட்டியவில் வதியும் திரு. இபுரா லெப்பே ஆதம்புள்ளேயினது 2017.09.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) அகலவத்த, பதுரலிய வீதி, இல. 53 இல் வதியும் திரு. கே.ஏ. சுனிலினது 2017.10.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vii) பிலியந்தல, மாம்பே, பி.எஸ். பெரேரா மாவத்தை, இல. 107 இல் வதியும் திரு. எல்.பி. ஜயசிங்கவினது 2017.10.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(viii) நாத்தாண்டிய, மாரவில வீதி, ஹெட்டிவத்தவில் வதியும் திரு. எம்.ஜே. மென்டிஸினது 2017.08.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ix) கண்டி, குளுகம்மன, மாலகம்மன, இல. 1/29 இல் வதியும் திரு. எம்.பி.கே. மாலகம்மனவிது 2017.11.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(x) பொரலஸ்கமுவ, பரோபாகார மாவத்தை, ரத்கெத இடம், இல. 1/30 இல் வதியும் திரு. எம்.ரீ. விஜேசேகரவினது 2017.11.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xi) மஹ எலகமுவ, ஹொரொபொலவில் வதியும் திரு. முஹம்மது இஸ்மாயில் நப்ஸாவினது 2017.11.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xii) மஹரகம, பிலியந்தல வீதி, இல. 193/5 இல் வதியும் செல்வி என்.டி. ஹேரத்தினது 2017.10.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xiii) கம்பஹா, நாரங்வல, இல. 44/7 இல் வதியும் திருமதி என்.டப்ளியூ.ஏ.ஆர்.டப்ளியூ. நாணாயக்காரவினது 2017.12.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xiv) மதுகம, ஓவிட்டிகல, இல. 582 இல் வதியும் திரு. பி.கே. பிரேமதாசவினது 2017.10.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xv) மீகஹதென்ன, மொரகல, பன்சலவிற்கு முன்னால் வதியும் திரு. பி.எல். உபுல் சந்தவினது 2017.09.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(xvi) கெசெல்வத்த, கொரகான, கல்கணுவ வீதி, இல. 126/5 இல் வதியும் திரு. பிரேமசிரி சுவாரிஸினது 2017.09.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ சமர்ப்பித்தார்.

(4) மாவனல்ல, தெஹிமடுவ, கந்தேஹேன, இல. சீ/111/6 இல் வதியும் செல்வி ஏ.ஏ.ஆர். தமயந்தி அமரசிங்கவினது 2017.11.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ தாரக பாலசூரிய சமர்ப்பித்தார்.

(5) கடவத, கோனஹேனவில் வதியும் திரு. டி.என்.ஆர். நந்தசிரியினது 2017.03.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பிரசன்ன ரணவீர சமர்ப்பித்தார்.

(6) காலி, இஹலகிம்பிய, பஹலவத்தவில் வதியும் திரு. ரீ.வீ. ரொஹான் குமாரவினது 2017.09.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. புலமைச் சொத்து (திருத்தம்):** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2018 பெப்ருவரி மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும், அது அச்சிடப்பட வேண்டுமெனவும், அச் சட்டமூலம் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்):** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரும் நீதி அமைச்சருமாகியவர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2018 பெப்ருவரி மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும், அது அச்சிடப்பட வேண்டுமெனவும், அச் சட்டமூலம் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "ஸ்ரீ நாத அகஸ்தான சர்வதேச புத்த தியான நிலைய செயலாற்றுகைச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி பிரேரித்தார். கௌரவ ஜே.சீ. அலவத்துவல அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் புத்தசாசன அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**8. சட்டமூலம் கொண்டுவர அனுமதி:** "நிமல் ரூபசிங்ஹ நட்புறவு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ இஷாக் ரஹுமான் பிரேரித்தார். கௌரவ மொஹமட் நவவி அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

47 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**9. ஒத்திவைப்பு**: "இப்போது இப்பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 1.56 மணிக்கு 2018 சனவரி 24 ஆம் திகதி புதன்கிழமை பி.ப.1.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.